**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 5/2017**

**Deposition of Witnesses for PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.ரவிசந்திரன் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.03.2025

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2015ம் தேதி கேணிக்கரை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது தேவிப்பட்டிணம் காவல் ஆய்வாளர் பொறுப்பு காவல் ஆய்வாளர் கேணிக்கரை காவல் நிலையம் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி நான், சார்பு ஆய்வாளர் கணேசலிங்க பாண்டி, மு.நி.கா.மோகன், ஆய்வாளருடன் ராமேஸ்வரத்திலிருந்து ராமநாதபுரம் வரும் வழியில் உள்ள பட்டிணம்காத்தான் சோதனை சாவடியில் நின்று வாகன தணிக்கை செய்துக் கொண்டிருந்தோம். அப்போது ராமேஸ்வரத்திலிருந்து ராமநாதபுரம் நோக்கி வந்த டி.என்.65 டு 68 டாடா மான்ஷா என்ற காரை ஓட்டி வந்த நபர் சோதனை சாவடியில் போலீசார் நிற்பதை பார்த்துவிட்டு காரை திரும்பி செல்ல முயன்றபோது அந்த நபரை காரை அருகிலுள்ள சுவரில் மோதிவிட்டு காரிலிருந்து தப்பி செல்லும்போது சுவற்றில் ஏறி குத்தபோது அவருக்கு 2 முழங்காலிலும், உடலிலும் காயங்கள் ஏற்பட்டது. அவரை பிடித்து விசாரித்தபோது செல்வக்குமார், வயது 32, த/பெ.ராமு, ராமேஸ்வரம் என தெரிவித்தார். அப்போது விஏஓ, கிராம உதவியாளர் இருந்தார். அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை விஏஓ, கிராம உதவியாளர் முன்னிலையில் பதிவு செய்தார். மேற்படி எதிரி காரின் டிரைவர் சீட்டிற்கு பின்பக்கம் உள்ள கஞ்சாவை எடுத்து ஆஜர் செய்தார். அதை எடை போட்டு பார்த்தபோது 5 கிலோ கஞ்சா இருந்தது. கஞ்சா மற்றும் அவரிடமிருந்து 7 செல்போன்கள் மற்றும் ரூ.14,500/- பணம், கார் ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து, அதில் சாட்சிகளாக விஏஓ, கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தனர். எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவரை வெளிநோயாளியாக ராமநாதபுரம் தலைமை அரசு மருத்துவமனையில்

சிகிச்சைக்கு கொண்டு சென்று எதிரியை நிலையம் கொண்டு வந்தோம். மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

என்னை ஆய்வாளர் என்ன தேதியில், எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்து 3,4 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது விஏஓ, தலையாரி இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னை ஆய்வாளர் விசாரித்தபோது அத்தாட்சியில் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் விஏஓ, தலையாரி கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன். நான் சுவற்றில் மோதி காரை நிறுத்தியதாக சொல்லப்படும் சுவர் காம்பவுண்ட் சுவராகும். அந்த சுவர் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. அது எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் தெரியாது. நாங்கள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எத்தனை வழக்குகள் பதிவு செய்தார்கள் என்றால் தெரியாது. அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலங்கள் ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் டைப் செய்யப்பட்டது. அதை யார் டைப் செய்தார்கள் என்றால் கணேசலிங்க பாண்டி சார்பு ஆய்வாளர் டைப் செய்தார். ஆய்வாளர் விசாரித்தபோது லேப் டாப் கொண்டு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதை எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுத்தார்கள் என்றால் அருகிலுள்ள கடையில் வைத்து எடுத்தார்கள். அவர் பெயர் ஞாபகம் இல்லை. பிரிண்ட் அவுட் எடுத்த காவலர் பெயர் மோகன். தராசு கொண்டு போனதாக முதல்விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அது எல்க்ட்ரானிக் தராசு. அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை. ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு என்ன வேலை செய்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதி ஆய்வாளருடன் ரைடுக்கு சென்றதாக சொல்து பொய் என்றும், எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் விஏஓ , தலையாரி கையொப்பம்செய்ததாக சொல்வது போலீசார் சொல்லிக் கொடுத்து ஆவணங்களுக்கு ஏற்றாற்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.